<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

OS No: 298/2009

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 22 நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அஹமது,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 22.07.2025

Dw1( சாந்தி பிரேம்குமார் )

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பில்).**

நான் பாதிரியார் படிப்பு படிப்பதற்காக 1998 ம் ஆண்டு மதுரைக்கு சென்றேன். 2002 ல் நான் அந்த படிப்பை முடித்தேன். வாசாஆ 1 கிரய ஒப்பந்தம் வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சாட்சி அடமானத்திற்கு தான் பேசியதாவும் அவருக்கு தெரியாமல் கிரயம் ஏற்பட்டதாகவும் கூறுகிறார்.வாதிக்கு கிரயம் ஏற்படுத்திக் கொடுக்க பூசப்பன் என்பவருக்கு பவர் எழுதிக் கொடுத்தோம் என்றால் அடமானத்திற்காக தான் ஆவணங்கள் ஏற்படுத்தினோம் ஆனால் பவர் ஏற்படுத்தியதாக சதாசிவம் எங்களிடம் சொல்லவில்லை என்று பதிலளிக்கிறார். வாசாஆ 2 பொது அதிகார ஆவணம் சாட்சியிடம் காண்பித்து அதிலுள்ள கையெழுத்து தனது, பெற்றோர் மற்றும் சகோதரிகளுடையதா என்றால் சாட்சி ஆமாம் என்று பதிலளிக்கிறார். கிரய ஒப்பந்தம் மற்றும் பொது அதிகார ஆவணம் பெருந்துறை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான், சாட்சி முன்வந்த தங்களுக்கு பதிவு செய்யக்கூடிய ஆவணங்கள் என்றும், பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஒன்று என்றும் சொல்கிறார். சாட்சி

முன்வந்து ஆவணங்களில் தங்களிடம் பதிவு அலுவலகத்திற்கு வெளியே கையொப்பம் பெற்றதாகவும் பதிவு அலுவலகத்திற்கு உள்ளே ஆவணங்களில் ரேகைகள் வைத்ததாகவும் கூறுகிறார். எனது எதிர்வழக்குரை, கூடுதல் எதிர்வழக்குரை மற்றும் திருத்தப்பட்ட எதிர்வழக்குரைகளில் வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 ஆவணங்கள் பதிவு செய்து கொடுத்தது உண்மை என ஒப்புக் கொண்டுள்ளோம் என்றால் சரிதான். சாட்சி முன்வந்து தாங்கள் வாங்கிய முழு தொகைகளையும் செலுத்திய பின்னரும் சதாசிவம் ஆவணத்தை ரத்து செய்து கொடுக்காமல் வாதி பெயருக்கு கிரய பத்திரம் ஏற்படுத்திவிட்டதாக பதிலளிக்கிறார். சதாசிவம் மற்றும் பூசப்பன் சேர்ந்து 11.08.2003 அன்று வாதியின் பெயருக்கு ஒரு கிரய பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல, அந்த ஆவணம் பொய்யானது. கிரய பத்திரம் ஏற்பட்ட தேதியில் சதாசிவம் ஒப்பந்தத்தின் பேரில் செலுத்திய 1,50,000/-மும் பாக்கி கிரயத் தொகை ரூ.25000 மும் எங்களுக்கு செலுத்துவதற்காக பொது அதிகார முகவரிடம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. கிரய தேதியன்று மாலை 6 மணியளவில் வாதி, சதாசிவம் மற்றும் பூசப்பன் ஆகியோர் தாவா சொத்திற்கு வந்து எங்கள் அனைவர் முன்னிலையிலும் பொது அதிகார முகவர் பூசப்பன் என் தாயாரிடம் பாக்கி கிரயத் தொகை ரூ.25000/- நேரில் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. நான் அப்போதே என் பாதிரியார் படிப்பிற்கு தேவைக்காக ரூ.10000/-த்தை என் தாயரிடம் சண்டை போட்டு பெற்றுச் சென்றேன் என்றால் சரியல்ல. 09.09.2022 அன்று பூசப்பன் இறந்து விட்டார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வாதியின் கணவர் சதாசிவத்திடம் நாங்கள் கடன் பெற்றதற்கு ஆதரவு எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நாங்கள் அவ்வாறு சதாசிவம் எங்களுக்கு கொடுத்ததாக ஒரு துண்டு சீட்டு ஆவணம் முன்னிலைபடுத்தி அந்த ஆவணத்தில் உள்ள சதாசிவத்தின் கையொப்பம் பரிசோதணைக்கு

உட்படுத்தப்பட்டு, அதிலுள்ள கையொப்பம் சதாசிவத்துடையதல்ல என நீதிமன்றதில் அறிக்கை பெற்ற பின் அந்த ஆவணத்தை எங்கள் தரப்பில் குறியீடு செய்ய நாங்கள் முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். மோசடியான ஆவணங்களை தயார் செய்து முன்னிலைபடுத்தி அது மூலம் நீதிமன்றத்தின் அனுதாபத்தை பெற முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. என் பெற்றோர்கள் ஆசிரியராக பணிபுரிந்தனர் என்றால் சரி. பிரதிவாதிகள் அனைவரும் படித்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்து விவசாய நிலம் என்றால் சரிதான். 2000 ம் ஆண்டு விவசாய நிலங்களை வைத்து விவசாய கடன் , பயிர்க் கடன் மற்றும் வங்கி கடன் குறைந்த வட்டி விகிதத்தில் பெற முடியும் என்றால் சரிதான். அவ்வாறு கடன் வசதி பெற முடியும் என்ற நிலையில் வாதியின் கணவர் சதாசிவத்திடம் கடன் பெற வேண்டிய அவசியம் என்ன என்றால் என் தாயாருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தினால் பண உதவி தேவைப்பட்டதால் நண்பர் மூலமாக அதிக வட்டி இருப்பினும் வங்கியில் உடனடியாக கடன் பெற முடியாது என்பதால் சதாசிவத்தை அணுகியதாக கூறுகிறார். சதாசிவத்தின் கடனை திருப்பூரில் உள்ள எங்கள் சொத்தை விற்பனை செய்து அடைத்தோம் என சொல்லியுள்ளேன் என்றால் சரி. அவ்வாறு திருப்பூரில் உள்ள சொத்தை விற்பனை செய்ததற்கும் கடனை திரும்ப செலுத்தியதற்கும் எவ்வித ஆதாரங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி முன்வந்து நம்பிக்கையின் பேரில் கடன் திரும்ப செலுத்தியதாக கூறுகிறார். கவுண்டச்சிபாளையம் சிஎஸ்ஐ வீதியில் என் தாயார் 2000-2003 ம் ஆண்டு வாக்கில் ஒரு புதிய வீடு கட்டினார் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் 2008- 2009 ம் ஆண்டு வீடு கட்டியதாக கூறுகிறார். புது வீடு கட்டுவதற்காகவும் எங்களது படிப்பு செலவிற்காகவும் திருமண செலவிற்காகவும் என் தாயார் பலரிடம் அந்த கால கட்டத்தில் கடன் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வீடு கட்டி முடிப்பதற்காகவும் கடன்களை தீர்ப்பதற்காகவும் என் தாயாருடன் நாங்களும்

சேர்ந்து வாதிக்கு கிரயம் ஏற்படுத்திக கொடுக்க ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. வாசாஆ 1 கிரய ஒப்பந்த்த்தின் அடிப்படையில் ரூ.1,50,000/- கிரய முன்பணம் தொகை பெற்ற பின் அவ்வாறு தொகை பெற்ற விவரம் வெளியில் தெரிய வேண்டாம் என்பதற்காக கிரயத்திற்கான காலக் கெடு 2 ஆண்டுகள் என எனது தாயார் கேட்டு் கொண்டதற்கிணங்கவே காலக் கெடு வாசாஆ 1ல் குறிப்பிடப்பட்டது என்றால் சரியல்ல. 2000 ம் ஆண்டு கவுண்டச்சிபாளையம், பெருந்துறை மற்றும் ஈரோடு மாவட்டத்தில் விவசாய நிலங்கள் குறைந்த மதிப்பிற்கு விலை போனது என்றால் சரியல்ல. 2000 ம் ஆண்டு தாவா சொத்தின் வழிகாட்டுதல் மதிப்பீடு ரூ.1,00,000/- தான் இருந்தது என்றால் சரியல்ல. வாதி கிரயம் பெற்ற பின் அதில் மண் கொட்டியும் நிலத்தை சமப்படுத்தியும் கம்பி வேலி அமைத்து வாதி விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. வாதி நிலங்களை அபிவிருத்தி செய்து விவசாயம் செய்து வைத்தன் காரணமாக ஈரோடு மாவட்டத்தில் தாவா சொத்து உட்பட அனைத்து நிலங்களும் 2005-2007 ம் ஆண்டு கால கட்டத்தில் சொத்துக்களின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் மதிப்பு கூடிவிட்டதால் குறைந்த விலைக்கு கிரயம கொடுத்ததால் நாங்கள் அனைவரும் வாதி மற்றும் அவர் கணவர் சதாசிவத்தை அணுகி கூடுதல் கிரய தொகை கேட்டு தொந்தரவு செய்து வந்தோம் என்றால் சரியல்ல. வாதி மற்றும் அவர் கணவர் சதாசிவம் தொகை கொடுக்க மறுத்ததால் நாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என காவல் நிலையத்தினை அணுகி பல புகார்களை கொடுத்தோம் என்றால் புகார் கொடுத்தது உண்மை. அந்த புகார்களை பொய்யான புகார் என எங்களையும் எனது பெற்றோரையும் காவல் துறையினர் எச்சரித்து அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. வாதி அவரது நிலத்தில் நாங்கள் மாடுகளை விட்டு பயிர்களுக்கு சேதம் விளைவிப்பதாக பல புகார்கள் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி மற்றும்வாதியின் கணவர் மீது புகார்

கொடுத்தது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வழக்கிற்கு முன்பாக வாதியின் நிலத்தில் நானும் என் தகப்பனாரும் அத்துமீறி நுழைந்து கம்பி வேலி கற்களை பிடுங்கி போட்டு, கம்பி வேலிகளை அறுத்தும், பயிர்களை நாசம் செய்தோம் என்றால் சரியல்ல, அவ்வாறு நாசம் செய்ததால் தான் வாதி வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு கம்பி வேலிகளையும் அகற்றியதும் சொத்துக்களை நாசம் செய்ததை குறித்து நீதிமன்றம் மூலம் பார்வையிட ஆணையர் நியமிக்க வாதி மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு நீதிமன்ற ஆணையர் தாவா சொத்திற்கு வரவில்லை என சொல்வது தவறு என்றும், நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால சரியல்ல. தாவா சொத்திலிருந்து 20 கி மீட்டர் அளவில் வாதி மற்றும் அவர் கணவர் வீடு உள்ளது என்றால் சரி. அடிக்கடி வாதியின் சொத்துக்களுக்கு தொந்தரவு கொடுத்தால் அதிக கிரயத் தொகை கிடைக்கும் என நாங்கள் தொந்தரவு செய்து வந்தோம் என்றால் சரியல்ல. வாதியின் கணவர் மீது நாளது தேதி வரை கந்து வட்டி தொடர்பாக எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நில அபகறிப்பு தொடர்பாக நாங்கள் புகார் எதுவும் கொடுத்துள்ளோமா என்றால் சாட்சி புகார்கள் கொடுத்தோம் என்றும் அந்த புகார்கள் வாதியின் சொல்வாக்கால் முடிக்கப்பட்டுவிட்டதாக கூறுகிறார். அது தொடர்பாக நான் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் தகப்பனார் வாதியின் கணவர் எங்கள் ஜாதி பெயரை சொல்லி பேசியதாக பெருந்துறை காவல் துறை துணை கண்காணிப்பாளரிடம் ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகார் நாங்கள் கிருஸ்தவ மதத்தை சார்ந்தவர்கள் என்பதால் நாங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்தவர்கள் அல்ல என விசாரணை செய்து புகாரை தள்ளுபடி செய்து விட்டனர் என்றால் சரியல்ல. வாதிக்கு தொந்தரவு கொடுப்பதற்காக வழக்கில் விசாரணையை ஒவ்வொரு காலக்

கட்டடத்திலும் கால தாமத படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கை நாங்கள் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாசாஆ 3 படி வாதி உரிய மறுபயனுக்கு எங்களிடமிருந்து சொத்தை கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றும் அதனால் வாதி கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனம் தற்போது வரை வாதியிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் தாவா சொத்து சம்பந்தமாக நாங்கள் ஒரு பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் சரிதான். அதில் வாசாஆ 3 ரத்து செய்யப்பட வேண்டும் என கோரியுள்ளோம் என்றால் ஆமாம். அந்த கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதி கோரியபடி அவருக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.07.22 16:52:41 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS